| தரம் **6** | பாடசாலை மட்ட மூன்றாம் தவணை மதிப்பீடு 2023(2024) **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பவியல்** | புள்ளி |
|---|---|---|

சுட்டெண் : ☐☐☐☐☐☐ நேரம் 1.30 மணித்தியாலம்

## பகுதி – I

- **மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01) கணினிக்குரிய இயல்புகளில சரியானது/சரியானவை?

A- மாறாத்தன்மை B- நுண்ணறிவுடையது C- செம்மை

1. B மட்டும் 2. B,C மட்டும் 3. A,C மட்டும் 4. A,B,C யாவும்

02) கணினி மென்பொருளுக்கு உதாரணமாக அமைவது

1. ஒலிபெருக்கி 2. பணிசெயல்முறைமை 3. வழிப்படுத்தி 4. சுட்டி

03) கணினியில் அடிப்படைத் தொழிற்பாடு **அல்லாதது** யாது?

1. உள்ளீடு 2. தொடர்பாடல் 3. வெளியீடு 4. முறைவழியாக்கம்

04) கணினி முறைமையினால் முறைவழியாக்கப்பட்ட தகவல்களை வெளியே பெற்றுக்கொள்ள பயன்படுத்தப்படும் சாதனங்கள்?

1. உள்ளீட்டுச் சாதனம் 2. வருவிளைவுச் சாதனம்
3. தொடர்பாடல் சாதனம் 4. தேக்ககச் சாதனம்

05) Farha.pptx எனும் கோப்புப் பெயரில் உள்ள கோப்பு நீட்சி யாது?

1. Farha 2. .ppt 3. .pptx 4. Farha.pptx

06) வலைமேலோடி ஒன்றின் படவுரு பின்வருவனவற்றுள் எது?

1. 
2. 

3. 
4. 

07) தேக்ககச் சாதனத்திற்கு உதாரணமொன்றாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

1. மைய முறைவழி அலகு 2. வன்வட்டு 3. சுட்டி 4. அச்சுப்பொறி

08) தரப்பட்டுள்ளவற்றுள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை?

1. இணையத்தைப் பயன்படுத்தி கற்றல்
2. தொழிற்சாலைகளில் எந்திரன் (Robot) பயன்படுத்தல்
3. பணத்தைப் பெறுவதற்கு தன்னியக்க காசாள் பொறியை (ATM) பயன்படுத்தல்
4. மேற்கூறிய யாவும் சரி

09) கணினியில் உள்ள கோப்புறை பொதுவாக ................................ நிறத்தில் காணப்படும்.

1. மஞ்சள் 2. பச்சை 3. கறுப்பு 4. நீலம்

10) பின்வருவனவற்றுள் உள்ளீட்டுச் சாதனம் எது?

1. 
2. 
3. 
4. 

11) கோப்பொன்றினை நகல் (Copy) செய்வதற்கான குறுக்குச்சாவி பின்வருவனவற்றுள் எது?
1. Ctrl+S 2. Ctrl+V 3. Ctrl+O 4. Ctrl+C

12) பின்வருவனவற்றுள் எது ஒரு கணினியைப் பாவிக்கும் போது பயன்படுத்த வேண்டிய சரியான கொண்ணிலையாகும்?

1.  2.  3.  4. 

13) கணினி தொழிற்படும் போது தரவு, அறிவுறுத்தல்கள், தகவல்கள் போன்றவற்றை தற்காலிகமாக சேமித்து வைத்துக் கொள்ளும் சாதனம் .................. எனப்படும்.
1. வன்வட்டு (Hard Disk) 2. தற்போக்கு பெறுவழி நினைவகம் (RAM)
3. மோடம் (Modem) 4. இருவட்டு (CD)

14) பின்வரும் கூற்றுக்களில் உண்மையானவை?
A- தெரிவிப்பி (Monitor) ஒரு உள்ளீட்டுச் சாதனமாகும்.
B- பல்லூடக எறிவை(Multimedia Projector) ஒரு வெளியீட்டுச் சாதனமாகும்.
C- வருடி (Scanner) ஒரு உள்ளீட்டுச் சாதனமாகும்.
1. A,B மட்டும் 2. A,C மட்டும் 3. B,C மட்டும் 4. A,B,C யாவும்

15) கீழுள்ள கடவுச்சொற்களில் வலுவானது எது?
1. Awh@r69# 2. amara56 3. @#@854 4. 49301210

16) பின்வருவனவற்றுள் கணினி உட்பொதிந்த சாதனம் **அல்லாதது**?
1. இலக்கமுறை வெப்பமானி 2. உழவு இயந்திரம்
3. செல்லிட தொலைபேசி 4. துணிச் சலவைப் பொறி

17) சொற்களுக்கிடையே ஓரளவு நீண்ட இடைவெளியை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் சாவிப்பலகையின் சாவி எது?
1. இடைவெளிச் சாவி (Space Bar key) 2. பின்வெளிச் சாவி (Backspace key)
3. தத்தல் சாவி (Tab key) 4. திசைச்சாவிகள் (Arrow keys)

18) பின்வருவனவற்றுள் உபுண்டு பணிசெயல்முறைமையின் வியாபாரக் குறியீடு யாது?
1. 2. 3. 4.

19) கணினியில் தொட்டுணரக் கூடிய கணினியின் பாகங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
1. மென்பொருள் (Software) 2. வன்பொருள் (Hardware)
3. உயிர்ப்பொருள் (Liveware) 4. நிலைப்பொருள் (Firmware)

20) [X] எனும் பொத்தான் பயன்படுத்தப்படுவது?
1. சாளரத்தை பெரிதாக்கல் 2. சாளரத்தை மூடுதல்
3. சாளரத்தை சிறிதாக்கல் 4. சாளரத்தை மறுவளவாக்கல்

**(20x2 =40 புள்ளிகள்)**

## பகுதி – II

- அட்டவணையின் இடைவெளிகளை நிரப்புக.

| பெயர் | குறியீடு | பயன்பாடு |
|---|---|---|
| ஆரம்பம் / முடிவு | ........................... | பாய்ச்சற்கோட்டுப் படத்தின் ஆரம்பம், முடிவைக் காட்டும் |
| உள்ளீடு / வருவிளைவு |  | ........................................<br>........................................ |
| ..................... |  | முறைவழியாக்கல் படிமுறைகளைக் காட்டும் |
| ..................... |  | தீர்மானமெடுப்பதைக் காட்டும் |
| பாய்ச்சற் கோடு | ........................... | தரவுப் பாய்ச்சலின் திசையைக் காட்டும் |

**(05x2 = 10 புள்ளிகள்)**

- **வரைதல் மென்பொருளில் பயன்படுத்தப்படும் பின்வரும் சிறுபடவுருக்களை (Icon) அவற்றின் விளக்கத்துடன் இணைக்குக.**











- வரைவதற்கான பென்சில் கருவி
- சித்திரத்தில் தேவையற்ற பகுதிகளை அழித்தல்
- வர்ணம் தீட்டுவதற்கான தூரிகை
- எழுத்துக்களை தட்டச்சு செய்தல்
- மூடிய பகுதியொன்றை அல்லது வடிவத்தை இலகுவாக வர்ணமாக்கல்

**(05x2 = 10 புள்ளிகள்)**

- **சரி (✓), பிழை ( X ) இடுக.**

1) ஏனையோரின் கணினி செயற்பாடுகளில் தலையிடக்கூடாது. ( )
2) சுட்டியினை சரியான முறையில் பற்றிப் பிடிப்பதால் கைகளில் நோவு ஏற்படும். ( )
3) கணினியைப் பயன்படுத்தி குறித்த ஒரு பணியை நிறைவேற்றுவதற்காக தயாரிக்கப்பட்ட கணினி செயல்நிரல்கள் மென்பொருள் எனப்படும். ( )
4) கணினி ஆய்வுகூடத்தினுள் உணவருந்துதல் நல்ல செயற்பாடாகும். ( )
5) இலத்திரனியல் கழிவுப்பொருள் மனிதனுக்கு புற்றுநோயை ஏற்படுத்தும். ( )

**(05x2 = 10 புள்ளிகள்)**

- பொதுவாக கணினியை சரியாக செயற்படுத்துவதற்குரிய விதத்தை ஒழுங்குவரிசையாக காட்டுவதற்கு சாதனங்களுக்கு 1, 2, 3, 4 எனும் இலக்கங்களை அவற்றின் கீழுள்ள கூட்டினுள் இடுக.

| முறைமை அலகை தொடங்குதல் | தெரிவிப்பியைத் தொடங்குதல் | ஆளியினூடாக மின் வழங்கல் | UPS ஐ தொடங்குதல் |
| --- | --- | --- | --- |
|  |  |  |  |
| | | | |

**(04x2 = 08 புள்ளிகள்)**

- **கீழுள்ள வரைவிலக்கணங்களுக்கு பொருத்தமான சொல்லை எழுதுக.**

1. கணினியில் தேக்கிவைக்கப்பட்டுள்ள விடயங்களை அனுமதியற்றோர் அணுகாதவாறு பாதுகாக்க வழங்கப்படும் இரகசியச் சொல்? ..............................
2. பிரச்சினை தீர்ப்பதற்காக மேற்கொள்ளும் படிமுறைகள் அனைத்தையும் ஒழுங்குமுறையில் கொண்ட செயன்முறை? ..............................
3. கணினி கழிவுப் பொருட்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை? ..............................
4. கோப்புக்களின் சேகரிப்பு எவ்வாறு அழைக்கப்படும் ? ..............................
5. கணினியை முறையாக கையாள்வதற்கு உரிய நல்ல பழக்கவழக்கங்கள் எவ்வாறு அழைக்கப்படும்? ..............................
6. இணையப் பக்கத்தைப் பார்வையிட பயன்படுத்தப்படும் மென்பொருளுக்கு வழங்கும் பெயர்?
..............................

**(06x2 = 12 புள்ளிகள்)**

- **A தொடக்கம் E வரையான சாதனங்களின் பெயர்களை எழுதுக.**





**A :** .............................. **B :** .............................. **C :** ..............................




**D :** .............................. **E :** ..............................

**(05x2 = 10 புள்ளிகள்)**